**அசல் வழக்கு எண். 104/2019**

04.10.2024

**பெயர் – முத்தக்குமார் (Pw1)**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) இந்த வழக்கில் நான் தாவாச் சொத்து சர்வே எண். 55/2A2 காலையில் உள்ள பூமியைப் பொறுத்து தான் ஆவணம் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 2, 3 பிரதிவாதிகளுக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் 9 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுதப் படிக்க தெரியும். எனக்கும், வழக்கில் சொல்லியுள்ள நாச்சிமுத்துவிற்கும் என்ன உறவு முறை என்றால் எனது தாத்தாவின் தாத்தா ஆவார். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் நாச்சிமுத்துக் கவுண்டர் இறந்த பின்னிட்டு சொத்துக்களை அவரது இரு மகன்கள் பாகம் செய்து கொண்டார்கள் என்று குறிப்பிட்டுள்ள நிலையில் மேற்படி நாச்சிமுத்து கவுண்டர் எப்போது இறந்தார் என்றால் சுமார் 100 வருடங்களுக்கு முன்பு இருக்கும். சரியாக தெரியவில்லை. சர்வே எண். 55/2A2 காலையில் 7.42 ஏக்கர் உள்ளது அதன் பட்டா மற்றும் புல வரைபடம் என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் பட்டா மற்றும் புல வரைபடம் என்றால் சரிதான். **அந்த பட்டா இணைய வழி நகல் பி.வா.சா.ஆ.1 ஆகவும் மற்றும் புல வரைபடம் இணைய வழி நகல் பி.வா.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

(2) மேற்படி பி.வா.சா.ஆ.1 பட்டா எண்.2483 என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 பட்டாவில் 30.06.2018 க்கு முன்பு வரை என் பெயர் சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்த போது தாவாச் சொத்திற்குண்டான பட்டா புல வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். தாவா தாக்கல் செய்த போது தாவாச் சொத்திற்குண்டான எந்த ஒரு வருவாய் ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண்.55/2A1, 55/2A3 ஆகிய எங்கள் குடும்ப சொத்து தனிப்பட்டாவாக உள்ளது என்றால் சரிதான். **என்னிடம் காட்டப்படும் நீதிமன்றத்தில் காட்டப்படும் சர்வே எண்.55/2A1, 55/2A3 காலையின் பட்டா பி.வா.சா.ஆ.3 ஆகவும், சர்வே எண்.55/2A1 புல வரைபடம் இணைய வழி நகல் பி.வா.சா.ஆ.4 ஆகவும், சர்வே எண். 55/2A3 புல வரைபடம் இணைய வழி நகல் பி.வா.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

(3) சர்வே எண். 55/2A3 பூமிக்கு தென்புறமாக பி.ஏ.பி. வாய்க்கால் உள்ளது என்றால் சரிதான். அதன் சர்வே எண். 55/2பி என்றால் சரிதான். **சர்வே 55/2பி –ல் உள்ள வாய்க்காலை காட்டும் புல வரைபடம் இணைய வழி நகல் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனது பூமியின் வடபுறத்தில் 55/2A1 காலையில் உள்ள பூமிக்கு தென்புறத்தில் பொதுத்தடம் உள்ளது என்றால் சரியல்ல 55/2A2 –ல் மேற்கு புறமாகத்தான் பொதுத்தடம் உள்ளது. அதன் சர்வே எண்.55/1A என்றால் 55/2A1, 55/2A2 பூமிக்கு மேற்கு புறமாக தான் பொதுத்தடம் உள்ளது. **என்னிடம் காட்டப்படும் சர்வே எண்.55/1A க்குண்டான பட்டா இணைய வழி நகல் பி.வா.சா.ஆ.7 ஆகவும், அதன் புல வரைபடம் பி.வா.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. 55 நெ.காலையில் 15.1 ஏக்கர் பூமி உள்ளது என்றால் 15.3 ஏக்கர் பூமி உள்ளது. 55 நெ.காலையில் 6 சப் டிவிசன்கள் (55/1A, 2A1, 2A2, 2A3, 1B, 2B) செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.ஏ.பி வாய்க்காலுக்கு நில ஆர்ஜிதம் செய்த போது எங்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட்டதா என்றால் இல்லை. மேற்படி பி.ஏ.பி வாய்க்கால் நில ஆர்ஜிதம் செய்ததற்கு நஷ்ட ஈடு பெற்றுக்கொண்டு அதற்கான ஆவணங்களை வைத்துக்கொண்டு இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

(4) 55/2A1, 55/2B, 55/2A3 காலையின் மொத்த விஸ்தீர்ணம் 7.42 ஏக்கர் அதில் வாய்க்காலுக்கு எடுக்கப்பட்ட சொத்தை மறைத்து பிரதிவாதியிடம் உள்ள நிலத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மோசடியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல (வாதி தரப்பு வழக்கறிஞர் எதிர்வாதத்தில் குறிப்பிடாத மேற்படி சங்கதியைப் பொறுத்து கேள்வி எழுப்புவதால் மேற்படி கேள்வி குறித்து ஆட்சேபணை தெரிவித்தார்)

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

ஒப்பம்/–கோ.விஜயகுமார், பி.எஸ்.சி., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்